**உண்மையுடைய தேவனுடைய ஊழியர்**.

**வாசிக்க**: 2**இராஜாக்கள்** 9:1-27, 13:14-21

இஸ்ரவேலில் அரசனாயிருந்த ஆகாபின் மகன் யோராமிற்கு பதிலாக மற்றொருவனை அபிஷேகம் செய்யும்படி கர்த்தர் எலிசாவிற்கு கட்டளையிட்டார்.

இது யோராமுக்குத் தெரியவந்தால் தன்னை கொன்று போடுவான் என்று எலிசாவுக்கு தெரியும். ஆனால் எலிசா உண்மையுள்ள தேவனுடைய ஊழியர். அவர் யெகூவை இரகசியமாக இராஜாவாக அபிஷேகம் செய்து வைத்தார். யெகூ தன் இரதத்தில் ஏறி இஸ்ரவேலில் அரசன் யோராமிடத்துக்குச் சென்றான். யோராம் தன்னுடைய சகோதரியின் மகனாகிய யூதாவின் அரசன் அகசியாவை தனக்கு உதவி செய்யும்படி கேட்டு, இருவரும் யெகூக்கு எதிர்த்து வந்தார்கள். ஆனால் இருவரும் கொல்லப்பட்டார்கள். எலிசா சொன்னபடி யெகூ இஸ்ரவேலில் அரசனானான்.

ஒருவரை கொன்று ஒருவர் அரசனாவது எப்படி தேவனுடைய சித்தமாகும் என்பதை நாம் அறியோம். அந்நாட்கள் பொல்லாத காலமாக இருந்தது. மக்கள் தேவனை பிரியப்படுத்தி வாழாமல் தங்கள் பொல்லாத வழிகளில் நடந்தார்கள். நடக்கப்போகும் காரியத்தை கர்த்தர் எலிசாவுக்கு முன்னறிவித்தார். எலிசா அதை எச்சரிப்பாக சொல்ல வேண்டியவர்களுக்கு சொன்னார். சில அரசர்கள் தேவனை முழுவதுமாக பின்பற்றாவிடினும் கர்த்தர் நீடிய சாந்தத்துடன் அவர்களுக்கு நன்மை செய்து திருத்துவதற்கு வாய்ப்புகளை கொடுத்தார்.

எலிசா வயதானதாலே சாகும் நிலையில் இருந்தார். அப்பொழுது எலிசா இஸ்ரவேலின் இளம் அரசனாகிய யோவாஸ் அவரை பார்க்க வந்தான். அவனுக்கும் கர்த்தருடைய செய்தியை உண்மையுடன் எலிசா அறிவித்தார். எலிசா யோவாசிடம் தன்னுடைய வில்லைப் பிடித்த கிழக்கே இருந்து ஜன்னல் வழியாக அம்புகளை எய்யச் சொன்னார். அப்பொழுது எலிசா கட்டிலிலிருந்து எழுந்து தன்னுடைய கைகளை அரசனுடைய கைகளில் வைத்து “அது சீரியரினின்று விடுதலையாக்கும் கர்த்தருடைய இரட்சிப்பின் அம்பு. நீர் சீரியரை முறியடிப்பீர் என்றார். எலிசா கை வருங்கால அரசனின் கையை திடப்படுத்தியது. இதுவே எலிசாவின் கடைசி வேலையாக வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. மரணபரியந்தம் எலிசா கர்த்தர் கொடுத்த வேலைகளை உண்மையோடு செய்து முடித்தார். நீயும் உன்னுடைய எல்ல வேலைகளிலும் சிறியதோ, பெரியதோ உண்மையாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

**கேள்விகள்**:

1. எது கர்த்தருடைய இரட்சிப்பின் அம்பு?

2. மரணபரியந்தம் எலிசா கர்த்தருக்கு எப்படிப்பட்டவராக இருந்தார்?

3. தேவன் உன்னிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்?